இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி, கணியனூர் கலவையில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் முன்னிட்டு கலைஞர் அவர்கள் படத்திற்கு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, மாணவ – மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்கினார். இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, திமிரி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.அசோக், துணைத் தலைவர் ஜெ.ரமேஷ், தாமோதிரன், சேசு, ரவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கலைமணி மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் தன்ராஜ், சிவகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சித்திக் பாஷா மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாநில அமைப்பாளர் இரா.சிவா தலைமையில்

புதுச்சேரி மாநிலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

புதுச்சேரி, ஜூன் 5 –

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாள் மற்றும் “செம்மொழி நாள் விழா நேற்று முன்தினம் புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இன்று காலை 07.00 மணியளவில் வில்லியனூர் அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

தொடர்ந்து அரியாங்குப்பம் தொகுதியில் பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர் சீத்தாராமன் ஆகியோர் ஏற்பாட்டில், வீராம்பட்டினத்தில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா மாலை அணிவித்தும், அவரது படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். முன்னதாக தி.மு.க. கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

பின்னர் தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏ.எப்.டி. திடலில் ஒன்றிணைந்து இருவண்ணக் கொடியேந்தி அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று அண்ணா சிலை அருகில் மாநில கழகம் சார்பில் அமைப்பட்டிருந்த கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து புதுச்சேரி அரசு சார்பில் புதுச்சேரி கடற்கரை சாலை மேரி கட்டிட வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், முதலமைச்சர் ரங்கசாமி தலைமையில், துணை சபாநாயகர் ராஜவேலு, அமைச்சர்கள் லட்சுமிநாராயணன், சாய் ஜெ.சரவணகுமார்,

தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், பாஸ்கர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் சிலைகளுக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா மாலை அணிவித்தும், அவரது படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். முன்னதாக தி.மு.க. கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதேபோல், புதுச்சேரியில் உள்ள 23 தொகுதிகளிலும் அந்தந்த தொகுதி கழகங்கள் சார்பில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டு, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாள் மற்றும் “செம்மொழி நாள் விழா யொட்டி புதுச்சேரி மாநில கழகம் சார்பில் இந்த மாதம் முழுவதும் மருத்துவ முகாம்கள், குருதிக்கொடை வழங்குதல், ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பொதுக்கூட்டம் நடத்தி கலைஞரின் சாதனைகளை விளக்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர்கள் அ.தைரியநாதன், ஏ.கே. குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.பி. திருவாவுக்கரசு, சண்.குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ.மூர்த்தி, நந்தா சரவணன், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா.செ.சக்திவேல், ந.தங்கவேலு, பெ.வேலவன், வீ.சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப.இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ்.எஸ். செந்தில்குமார், வே.மாறன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ.சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ.நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல்.மணிகண்டன், து. சக்திவேல், கோ.தியாகராஜன், ர. சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய.கார்த்திகேயன், சே.ராதாகிருஷ்ணன், ம.கலைவாணன்,

அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, விவசாய அணி வெ. குலசேகரன், விவசாய தொழிலாளர் அணி ப. தவமுருகன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், மீனவர் அணி ந.கோதண்டபாணி, நெசவாளர் அணி ந.செந்தில்முருகன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், வர்த்தகர் அணி சு.ரமணன், தகவல் தொழில் நுட்ப அணி தாமோ. தமிழசரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம.மதிமாறன், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ.முகம்மது ஹாலிது, சுற்றுச்சூழல் அணி த.முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், வழக்கறிஞர் அணி ச.பரிமளம், தொ.மு.ச. அண்ணா அடைக்கலம், அணித் தலைவர்கள் நெசவாளர் அணி மா.மதி (எ) சுப்புராயன், வழக்கறிஞர் அணி ச.லோககணேசன், மகளிர் அணி ரா. சந்திரகலா, மகளிர் தொண்டர் அணி சத்தியா, விவசாய அணி ஆ. பாஸ்கர் (எ) ஆனந்தன், விவசாயத் தொழிலாளர் அணி ரா. நாவப்பன், ஆதிதிராவிட நலக்குழு மு. பழனிசாமி, மீனவர் அணி பா.தில்லையப்பன் (எ) ரமேஷ், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை புலவர் பா. கிருஷ்ணமூர்த்தி, இலக்கிய அணி கலைமாமணி எம்.எஸ். ராஜா, பொறியாளர் அணி எஸ்.பி. பூபாலன், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அ. அலெக்ஸ்சாண்டர், வர்த்தகர் அணி க.செல்வமுத்து, குமார விநாயகம், சுற்றுச்சூழல் அணி அரங்க பன்னீர்செல்வம், அயலக அணி மு.முகஹம்மது தாஹா, அமைப்புசாரா ஓட்டுநர் அணி எஸ்.எம்.எஸ். ஸ்ரீதர், தொமுச பொ. அங்காளன், துணைத் தலைவர்கள் வர்த்தகர் அணி இரா. குரு (எ) சண்முகசுந்தரம், மகளிர் அணி வெ. பிரியதர்ஷினி, மகளிர் தொண்டர் அணி ரா. விஜயலட்சுமி, விவசாய அணி க. செல்வராசு, விவசாயத் தொழிலாளர் அணி க.மதிவாணன், ஆதிதிராவிட நலக்குழு அ. கதிரவன், மீனவர் அணி ம. குமணன்,

கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஜே.ஆர்.ராஜேஷ் (எ) சேவியர் ராஜேஷ், இலக்கிய அணி வி.எஸ். பாண்டியன், நெசவாளர் அணி கி.கதிரவன், பொறியாளர் அணி ரா. மணிகண்டன், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு ந.சுனில்குமார், சுற்றுச் சூழல் அணி ஞா. நவீன் (எ) மணிகண்டன், அயலக அணி அ.பக்ருதீன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மு.லட்சுமணன், வழக்கறிஞர் அணி பெ தாமோதரன், வீ.ராமகிருஷ்ணன், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி வீ.தமிழ்ப்பிரியன், மு.உத்தமன், ம. ரெமிஎட்வின், தே.தாமரைக்கண்ணன், பா, கிருபாசங்கர், ஜெ. சந்துரு, ப. பஜீலுதீன், ரொ. நித்திஷ் நிமோத்தி, அ. முகிலன், மாணவர் அணி ந.கண்ணன், வீ.கீர்த்தி எழனி, அ.ஜான்சி ராணி, கு.வினோத்குமார், ஜ.அமுதன், ஏ. ஸ்டீபன்ராஜ், கோ. சச்சின் பரத், ரா. ஸ்ரீஹரி, ஜோசப் பிரான்சிஸ், பிரேம் சந்தர், செ. அலெக்ஸ்சாண்டர், மகளிர் அணி ரமா, ர.புஷ்பலதா, வீ.நல்குணா, ஜெ.தேன்மொழி, அ. காமாட்சி, ஏ. கல்யாணி, சமூக வலைதள பொறுப்பாளர்கள் வீ.சூர்யா, மோ.புஷ்பலதா, மகளிர் தொண்டர் அணி ரா. சுமித்ரா, க. ஜெயபாரதி, கு.குப்பம்மாள், ஜோ. கஸ்தூரி, மு.அரசம்மாள், சு.ராஜலட்சுமி, பா.சித்ரா, த. புவனேஸ்வரி, செ. தைலம்மை, விவசாய அணி ப.சுந்தரமூர்த்தி, ஏ.காசிநாதன், மு.சுப்ரமணி, ஆ. பாண்டியன், மா.ஜெயசீலன், ப. நாராயணசாமி, தே பெருமாள், மா. ராமானுஜம், து.ஹரிதேவன் (எ) சுகுமார், வெ.அருள், செ.சுரேஷ்குமார், விவசாயத் தொழிலாளர் அணி சி.ராமதாஸ், ப.அமிர்தலிங்கம், ஆ.சிவப்பிரகாசம், கி.பழனிசாமி, கு.குமார், ரா. பாலு, து.கோபி, ம.தேவநாதன், அ. கல்பனா அபிமன்யு, ஆதிதிராவிட நலக்குழு து.அன்பழகன், அ.சக்திவேல், சி.திருநாவுக்கரசு, அ.காளி, சு. கலியமூர்த்தி, க.தெய்வேந்திரன், ந.ஆறுமுகம், ஏ.கமலக்கண்ணன், சக்திவேல், பா.அய்யனார், மீனவர் அணி த. சுப்புராயன், இரா. பன்னீர்செல்வம், நா. மதிவாணன், பெ. விநாயகமூர்த்தி, வ. தங்கராசு, ம. வீரபத்திரன், கா.மாரிமுத்து, ஏ.விஜயபாலு, தே.நிலவழகன், சு.ஜெயமூர்த்தி,

கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சீ.அன்புமாறன், ஜி. என். ஸ்ரீதர், சே. உத்திராபதி, தே. தேசிகன், ஆ. ஏழுமலை (எ) ரமேஷ், சு.வீரமணி, இரா.தியாக ராஜன், வி. ஜெ.வெங்கடஜலபதி, இலக்கிய அணி சொ.சோமசுந்தரம், த.தர்ம ராஜா, ரா.ஆளவந்தார், நா. கோதண்டபாணி, கே.கலிவரதன், த.கலிமுல்லா, அ. ஜபருல்லா, நெசவாளர் அணி த. செல்வராசு, வி.வேலாயுதம், இரா. சேகர், கி.சுப்ரமணியன், தி.சிவக்குமார், து.அன்பு, க.வேல்முருகன், பொறியாளர் அணி ஆ.பிரபாகரன், ஏ.வீரமணிகண்டன், கு.சுவாதி, க. உமாபதி, ஏ. எழிலரசன், சு.முகுந்தன், இரா.பிரகாஷ், வி.ரமேஷ், சே.சுவர்ணராஜ், ம.அர்ஜுன் (எ) ரங்கராஜீ, மருத்துவர் அணி சு.கார்த்திகேயன், பு.ஆதிசங்கரன், மோ. சுந்தர், சி. கார்த்திகேயன், சி. சந்தோஷி, ஜெப்ரிமார்ட்டின், கு.மணிகண்டன், மோ.அபிலாஷ், தெ. நாகார்ஜுனன், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு ஜசக் நேசமணி, கா.முகமது இஸ்மாயில், நாசூர் மீரான், ஷா. ஷேக், அ.முகமது இஸ்மாயில் பாஷா, அ.சையது அபுதாஹிர், லியாகத் அலி (எ) ஹாருத் துல்லி, மரியஜோசப்திவி, நோயல், வர்த்தகர் அணி அ. ஹாஜிமுஹம்மது, ந.சரவணன், ஆ.ஹரி, ரா.அன்புச் செல்வம், அ.சுப்ரமணியன்,த.சத்திய குமார், ரா.ஜெயப்பிரகாஷ், ப.கலியமூர்த்தி, செ.கருணாகரன், கா.சிதம்பரநாதன்,

சுற்றுச்சூழல் அணி த.அரிதாஸ், ஜெ.பாலு, சா.சுரேஷ், த.கார்த்தி, எ.பிரபு, ரா.பாலசண்முகம், ப. கணேசன், மு.முத்தரசன், பெ.வெங்கடேசன், அயலக அணி முகம்மது மரக்காயர், வெ.முத்து, ப.சிவா (எ) சிவசுப்ரமணியன், ரா. விக்னேஷ்குமார், மு.சுரேஷ், ஜெ. மணிகண்டன், ரா.ஸ்ரீதர், ஆ. ஏழுமலை, பா.வினோத், மு.இளந்தென்றல், அமைப்புசாரா ஓட்டுநர் அணி த. ராமு, கா. செல்வராஜ் என்கிற குட்டி, சு. உதயசூரியன், அ.அஜிபாஷா, ரா. லோகநாதன், கு.வெங்கடேசன், ம. காத்தவராயன், ஆ.ராஜாராம், கா. ஆறுமுகம், விளையாட்டு மேம்பாட்டு அணி யோ.எமிலன், ஏ. தவமணி, பெ. விஜி (எ) வெங்கடேசன், ந. குணராஜ், ரா.ஆனந்தன் (எ) ஐய்யனார், இ.சீனுவாசன், சே.யோகேஷ், கோ.கெஜபாலன், செ.அய்யப்பன், ஜா.அகஸ்டீன் சித்து, ச.சிவசக்தி முருகன், வழக்கறிஞர் அணி சந்தோஷ்குமார், முருகையன், சுகந்தி, சண்முகசுந்தரம், ஞானராஜன், தொ.மு.ச. வை. காயாரோகணம், செ.துரை, த.ராஜேந்திரன், ந.சீனுவாசன், த.ரவி, சு.கண்ணன், வீ.ரவி, த.சிவக்குமார், ஆ.மர்ஷேல் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்கள் 1102 பேருக்கு பிரியாணி, இனிப்புகள் வழங்கினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசுகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எஸ்அரசு, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் அசோக், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ், அயலக அணி அமைப்பாளர் லோகநாதன், சுரேஷ் குமார், இர்பான், சிலம்பரசன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், நகர,பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கலைஞர் ஒரு சகாப்தம்!

ஜூன் 3ஆம் நாள் செம்மொழி நாள்! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாள்.

கலைஞர் கொண்ட கொள்கையில் உறுதியானவர். பெரியார் அண்ணாவின் பாதையில் இலட்சியப் பயணம் நடத்திக் கொண்டிருந்தார். அவர் தம் பகுத்தறிவுப் பாதை நேரானது. அவரைப் போலப் பயணம் தொடர்ந்தவர்கள் சிலர், செல்வம் சேர்க்க பின்தங்கி விட்டனர். இன்னும் சிலரோ பதவிகளுக்காகக் கிளைப் பாதைகளில் தவறி விட்டனர். மேலும், சிலரோ நிழல் தேடி ஒதுங்கி விட்டனர். அதிலும் சிலரோ, அதிகார அச்சத்தால் தொலைந்தும் போய் விட்டனர். ஆனால், கலைஞர் ஒருவரே, சூரியத் திசையில் சுழலும் பூமியாக அரசியல் வலம் வந்து கொண்டு இருந்தார்.

கலைஞரைப் பற்றித் தந்தை பெரியார் தீட்டிய வைரவரி வாசகங்கள் நம் நெஞ்சை பூரிப்படையை செய்கின்றன. “அண்ணா அவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டை திறம்பட ஆண்டு வரும் கருணாநிதி, உழைப்பால் உயர்ந்தவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பில் தோன்றிச் சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபட்டுப் பலப்பல தியாகங்களைச் செய்து முன்னேறியவர்! இன்று தமிழகத்தை முன்னேற்றி வருபவர்; அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, நமக்கு கிடைத்த மாபெரும் சொத்தாகவே கலைஞரைக் கருதுகிறேன். அண்ணா மறைவின் போது அவரைப் பற்றி அவர் பாடிய கவிதை கேட்டபோதுதான், அவர் எவ்வளவு பெரிய புலவராக வளர்ந்து இருக்கிறார் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. உடனே டெலிபோனில் கூப்பிட்டு, ஐயா! நீங்கள் இவ்வளவு பெரிய புலவர் என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன் என்று பாராட்டினேன். இவ்வளவு நெருங்கிப் பழகிய என்னாலையே அவருடைய திறமைகளை உணர்ந்து கொள்ள முடியவில்லை. அப்படி எந்தத் துறையிலும் பிரகாசமாக விளங்குகிறார் . கலைஞர் கருணாநிதி அவர்கள் எந்தெந்த வகையில் எதிர்ப்புகள் வந்தாலும், அவைகளைச் சமாளித்து, தி.மு.க கழகத்தின் தொண்டராகப் பணியாற்றும் கழகத் தலைவர் இவரைப் போல கட்சிக்குப் பணியாற்றும் ஆள் கிடைப்பது அபூர்வம்” என்று அவர் தந்த சான்றாகும்.

1959 இல் கழகம் முதன் முதலாகச் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தது. அத்தேர்தலில் கழக வேட்பாளர்களை நிறுத்த தயங்கினார். ஆனால், கலைஞரோ அண்ணாவிடம் நாம் தேர்தலில் உறுதியாக நிற்க வேண்டும் என்று வலியுறுத்தியதோடுமொத்த 90 இடங்களுக்கான கழக வேட்பாளர்களை நிறுத்துவது என்றும், அவர்களின் பெயர்ப். பட்டியலையும் கொடுத்து விட்டார். தேர்தலில் கடுமையாகக் கலைஞர் உழைத்த காரணத்தினால் 45 கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். செய்தியைக் கேட்டதும் அண்ணா அவர்கள் கலைஞரைப் பார்த்து 45 பேர் வெற்றி பெற்று விட்டார்கள். ஆனால், நான் உன்னிடம் தோற்றுவிட்டேன் என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

வெற்றி பெற்றதற்காகச் சென்னை மெரினா கடற்கரையில் கலைஞருக்குப் பாராட்டு விழா அண்ணா தலைமையில் நடந்தது. “....கருணாநிதி இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்து பல இடங்கள் வெற்றி பெறும் என்று சொன்னார் .நான் முடியாது என்று அவசரப்பட்டு சொன்னேன் .அப்படி வெற்றி பெற்றால் என்ன தருவீர்கள்? என்று கருணாநிதி கேட்டார். நான் தரவேண்டியது இருக்காது என்று எண்ணத்தில், ஒரு பவுன் தங்க மோதிரம் போடுகிறேன் என்று சொன்னேன் . நான் என் மனைவிக்குக் கூட ஒரு நகை வாங்குவதற்காக எந்தக் கடைக்கும் போனதில்லை. இந்த 45 பொல்லாத தோழர்கள் வெற்றியினால், இந்தக் கட்டிளங்காளைக்கு, நானே கடைக்குச் சென்று கணையாழி வாங்கி அளிக்க வேண்டியவனாகி விட்டேன் .இந்தத் தேர்தலில் மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றிய கருணாநிதி என் பாராட்டுக்குரிய, என்னுடைய பெரும திப்பிற்குரிய இலக்காக இருப்பவர். நீங்கள் எல்லாம் மகிழத்தக்க வகையில், இந்தக் கணையாழியை அவர் விரலில் அணிவிக்கிறேன்” என்று அண்ணா அணிவித்த கணையாழி கலைஞரின் இறுதி மூச்சு வரை அவரது விரலிலே தான் உயிராக இருந்து வந்தது!

கவிஞர் தமிழ்தாசன்
- கழகத் தீர்மானக் குழுத் தலைவர்

1953 ஆம் ஆண்டு ஜூலை 15 மும்முனை போராட்டம் தொடங்கியது. சித்தூர் எல்லைப் போராட்டம் குறித்து முட்டாள்தனம், நான்சென்ஸ் என்று பிரதமர் பண்டிதர் நேரு கிண்டல் செய்து பேசியதைக் .கண்டித்தும், இராஜாஜி அவர்கள் குலக்கல்வித் திட்டத்தை கொண்டு வந்தததை எதிர்த்தும், டால்மியாபுரம் என்ற வடநாட்டுக்காரனின் பெயரைக் கல்லக்குடி என்று தமிழ்ப் பெயராக மாற்றக் கூறியுமான போர். அண்ணாவால் அறிவிக்கப்பட்டது. இப்படியான போராட்டங்களினால் கழகத்தின் மதிப்பு உயர்ந்தது! மூன்றாம் முனைப் போராட்டமான டால்மியாபுரம் என்ற பெயரைக் கல்லக்குடி என்று மாற்றக் கூறும் போராட்டம் . கலைஞர் தலைமையில் முல்லை சக்தி, கஸ்தூரி, குமாரவேல், எஸ் குழந்தைவேல் ஆகிய ஐவரும் தண்டவாளத்தின் மீது தலை வைத்துப் படுத்து இரயிலைப் போக விடாமல் தடுத்தனர். அதனால் கைது செய்யப்பட்டார் கலைஞர். அவருடன் முல்லை சக்தி, கஸ்தூரி, குமாரவேல் குழந்தைவேல் ஆகிய ஐந்து பேர் உட்பட 35 பேருக்கு அரியலூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்து, திருச்சி மத்திய சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டார்கள்.

இதனை நினைவு கூரும் வகையில், கலைஞரின் பிறந்த நாளில் அண்ணா அவர்கள், கலைஞர் பற்றிப் பேசும்போது, ‘தண்டவாளத்தில் தலை வை என்று சொன்னாலும், மந்திரி பொறுப்பை ஏற்றுக் கொள் என்று சொன்னாலும், இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி” என்று பாராட்டுகளுடன் பெருமைப்படுத்திப் பேசி உள்ளார்.

இந்தி எதிர்ப்புப்போரில் சோழமண்டல மாநாடு, பாண்டி மண்டல மாநாடு சிறப்பாக நடத்தப்பட்டன தேனியில் இராஜேந்திரன் தலைமையில் விழா நடந்தது. அப்போது வீர வாள், கேடயம் கலைஞருக்குப் பரிசு அளிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டார் கலைஞர்”..

அவ்விழாவில் அண்ணா நீண்டதோர் உரையாற்றிக் கலைஞரைப் பாராட்டினார் .....” என்னைப் பொறுத்தவரையில் கருணாநிதியின் தொண்டிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி எதுவென்றால், திருவண்ணாமலை வெற்றிக்கு உழைத்ததும் அல்ல; சென்னை மாநகராட்சி வெற்றி பெற ஆற்றிய தொண்டுமல்ல; அவர் சிறு வாலிபராக இருந்த போது பிரச்சாரத்தால் முறுக்கேறிய காங்கிரசார் அவரை அடித்து, “ஆள் தொலைந்து விட்டான்” எனக் கருதும் அளவிற்கு உதைத்த காங்கிரசார், சிறுவனை ஒழித்து விட்டோம் என இரத்தம் பீறிடும் அளவுக்குப் புதுவையிலே காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கிய சம்பவம் தான்!

....”ஒரே குடும்பத்தில் உள்ள நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறப்பானவர்கள்; நல்ல தமிழ் பேச நாவலர், உருக்கமாகப் பேச கருணாநிதி, சண்டமாருதம் போல் பேச சண்முகம், மாணவர்களுடையே பேச மதியழகன் இருக்கிறார்கள். அதையே தான் கருணாநிதி தான் வீரவாளைப் பெற்ற போது, “நான் ஒருவன் மட்டுமே இந்தத் தகுதி பெற்றவன் அல்ல; பலர் இருக்கிறார்கள்” என்றார். கலைத்துறையிலே கருணாநிதி பெற்ற புகழ் கொஞ்ச நஞ்சமல்ல; “பராசக்தி” மூலம் அவர் அடைந்த புகழோடு, மேலும், மேலும் பலத் திரைப் படங்களாலும் அவர் புகழ் அடைந்தார். கருணாநிதி அந்தப் புகழை நம்பி அந்தத் துறையிலேயே சென்று இருந்தால், பணத்தோடும் வாழலாம்; பகட்டோடும் வாழலாம்! ஆனால், அவர் கொண்ட இலச்சியத்தை மறந்து விடவில்லை!

“சர்க்கஸ்காரன் உயரத்தில் விளையாடினாலும், பூமியில்தான் இறங்க வேண்டும். விளையாடும் பொழுது கூட அவன் பூமியைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பான்; பூமியைப் பார்க்காமல் மேலே பார்த்துச் செல்பவன் பபூன் தான்! அவன்தான் தடுமாறி விழுவான்! அந்த இரகத்தைப் போன்று அல்லாது, கழகத்தை மறவாது, எந்தப் புகழுக்கும் மயங்காது பணியாற்றுபவர் தான் கருணாநிதி!” என்று உச்சி மோந்துப் பாராட்டினார் அண்ணா.

தமிழக எல்லையைத் தாண்டிக் கேரளா பகுதியில் உள்ளது வண்டிப் பெரியார் எனும் ஊர். அவ்வூர் கழகத் தோழர்கள் அழைப்பின் பேரில், ஏற்பாடு செய்யப்பட்ட நிதியளிப்புப் பொதுக் கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தார். அவர் மேடையில் அமர்ந்திருந்த போது, வட்டார தோழர் ஒருவர் பேசிய தவறான வார்த்தையின் காரணமாக எதிரிகளால் மேடை மற்றும் நாற்காலிகள், குழல்விளக்குகள் தாக்கப்பட்டன. இதனால் கலைஞரைப் பாதுகாப்பாகக் காட்டு வழியே கொண்டு சென்று கம்பம் நகரில் சேர்த்தனர். அவருடன் வந்திருந்த கழக முன்னோடிகள் வெவ்வேறு வழியில் சென்று விட்டனர்.

இந்தச் செய்தி. ... “கருணாநிதி உயிர்தப்பினார்” ...என்று மாலை ஏடுகளில் வந்தது. காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்குக் காரில் வந்து கொண்டிருந்த அண்ணா அவர்கள், இச் செய்தியைப் படித்தறிந்தார். அண்ணாவுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த அன்பில் தர்மலிங்கம் மற்றும் இளமுருகு பொற்செல்வியைப் பின்னால் திரும்பிப் பார்த்து அண்ணா அவர்கள். கலைஞருக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தை நினைத்து வருத்தத்தோடு,சற்று கோபத்துடன் பேசினார்.... “அன்பில்!..... கருணாநிதி யிடம் சொல்! அவன் உயிர், அவனுக்கு மட்டும் சொந்தம் அல்ல; தமிழகத்திலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற உயிர்! துணிவு என்பது வேறு; அசட்டுத் தைரியம் என்பது வேறு! எத்தனையோ பேர் கழகத்திற்கு வரலாம் போகலாம்; ஆனால், ஒரு கருணாநிதியைப் பெற முடியாது “.... என்று வருத்தத்துடன் கூறினார். இப்படிக் கலைஞர் மேல் அண்ணா கொண்டிருந்த பற்றுப் பாசத்தை எப்படி, எவ்வாறு கூறுவது?

1965 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர்கள் போராட்டம் நடந்து வந்தது. அண்ணா உட்பட கழகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அதற்கு முன்னர் 16-2-1965 அன்று நள்ளிரவு முரசொலி அலுவலகத்தில் கலைஞர் நீட்டோலை என்ற அரசியல் மடல் ஒன்றையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்ற தலையங்கத்தையும் எழுதிக் கொண்டிருந்தார். நள்ளிரவு வீட்டிற்குக் கிளம்பும் நேரத்தில் திடீரென்று காவல் துறை உதவி ஆணையர் ஒருவருடன்வேறு சில அதிகாரிகள் வந்து, கதவைத் தட்டித் தங்களை விசாரணை செய்ய வேண்டும் என்று கைது செய்து காவல்துறை ஆணையர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். கலைஞர் எழுதுவதிலும், பேசுவதிலும் மாணவர்களைத் தூண்டி விட்டார் என்று சென்னையிலிருந்து 600 கீ.மீ. தொலைவிலுள்ள நெல்லை, பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர். அவர் மீது இந்திய பாதுகாப்புச் சட்டம் 30 (1)இப்படி வழக்கு பதிவாகியிருந்தது. சில நாட்களுக்கு பிறக